## ஏப்ரல் - 7

**"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்."**

**- பிலி 4 : 19**

மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை பிரசங்கிக்க உங்களிடம் தீவிரமான ஆர்வம் இல்லாதிருந்தால், அதற்காக ஊக்கமாகவும், உண்மையாகவும், பிடிவாதமாகவும் ஜெபம் செய்து அதற்காகக் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுது சீக்கிரத்தில் அதைப் பெற்றுக் கொள்ளுவீர்கள். உங்களுக்கு ஆர்வமும், அன்புமும் இருந்து, அதைத் தெரிவிக்கத் திறமை இல்லாதிருந்தால், உங்களிடமுள்ளதை முழுதுமாக உபயோகிகப் படுத்திக்கொண்டு, திறமைக்காக ஜெபியுங்கள். உங்களுக்கு ஆர்வமும் திறமையும் இருந்து, ஒரு சந்தர்ப்பம் தேவையாயிருந்தால், கூடிய சீக்கிரத்தில் அதை கர்த்தரிடத்திற்கு ஜெபத்தில் எடுத்துச் சென்று நீங்கள் உங்களிடமுள்ள எல்லா சந்தர்ப்பங்களையும் உண்மையாக உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவரிடம் சொல்லுங்கள். பிறகு கிடைக்கக் கூடிய மிகவும் கீழானதும் மிகவும் சிறியதுமானவற்றை செய்ய உங்கள் கரத்தைத் தளர்த்தாமல், அதிகமான சந்தர்ப்பங்களுக்காக கவனித்துப் பாருங்கள்.

**- Z '96, 163(R 2004).**

உண்மையுள்ளவர்களிடத்தில் அபிவிருத்திச் செய்ய தேவன் வாக்குக் கொடுத்திருக்கும் ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகிய இவைகள் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் வேண்டியிருக்கிறது. தமது ஞானம், நீதி, அன்பு, வல்லமை இவைகளின் ஆழமளக்கக் கூடாத பொக்கிஷங்களிலிருந்து அவர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுக்க யேகோவா ஏராளமான செல்வங்கள் வைத்திருக்கிறார் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், விடுதலையுமாயிருக்கிற தமது குமாரனிலும், குமாரன் மூலமாகவும் அவைகளைக் கேட்கும் யாவருக்கும் உண்மையாகவே தாராளமாகக் கொடுக்கிறார்.

**-P '27, 55.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

சங் 23; 34:7-10; 50:10; 65:9-13; நீதி 8:21; ஏசா 25:4; மல் 3:10; மத் 6:26-33; ரோம 8:28; 2கொரி 9:8,9; எபி 13:5,6; 1பேது 5:7; எபே 1:7; 3:16.

**கோபுர வாசிப்பு :** Z '14, 230(R 5508)

**வினாக்கள் :** இந்த வாரம் தேவன் என் தேவைகளைத் தந்து உதவினாரா? எந்தச் சந்தர்ப்பங்களில்? அது என்னை எப்படிப் பாதித்தது?